10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 336 புதன்கிழமை 25 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## சீ.வி.கே.யின் மனைவி காலமானார்



யாழ்ப்பாணம், ஏப்.25

வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவ ஞானத்தின் மனைவி சரோஜினிதேவி உயிரிழந்துள்ளார்.

இவர் தனது 68ஆவது வயதில் நேற்று இரவு காலமாகியுள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை 06▶



# 6 மாகாணங்களுக்கும் ஒக்ரோபரில் தேர்தல்

## மகிந்த தேசப்பிரிய பச்சைக்கொடி

கொழும்பு, ஏப்ரல் 25

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடாத்த முடியுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் இறுதிப் பகுதியில் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளன. மாகாண சபைகள் தொடர்பான சட்டங்கள் மூன்று மாத காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட்டால் ஒக்டோபர் மாதம் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை 06▶

# கடத்தல்களால் பதற்றம்

## முல்லை சிறுமி யாழில் மாயம்



முல்லைத்தீவு, ஏப். 25

யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற முல்லைத்தீவைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமியை காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முள்ளியவளை கிழக்கு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவநேசன் கஸ்தூரி (வயது 15) என்ற சிறுமியே காணாமல்போயுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம், 06▶

## சுதந்திரபுரத்தில் சிறுவன் மாயம்



முல்லைத்தீவு,ஏப்.25

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் மத்தி பகுதியில் வசித்துவந்த சிறுவன் ஒருவனைக் காணவில்லை என உறவினர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவின் சுதந்திரபுரம் மத்தி 40 ஏக்கர் பகுதியை 06▶



# கோத்தாவை கைது செய்

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 25

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைக்கு முழுக்காரணமாக இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவை கைது செய்யக் கோரி கொழும்பில் நேற்று அமைதிப் போராட்டம் நடத்தப்பட்டது.

கோத்தாபய 06▶





# சம்பந்தர் மீது வச்ச குறி தப்பியது

கொழும்பு, ஏப். 25

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கூட்டு எதிரணி இன்னமும் இறுதியான தீர்மானங்களை மேற்கொள்ளவில்லை.

கட்சியின் உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்துக்களுக்கும், கட்சியின் கருத்துகளுக்குமிடையில் பாரிய 06▶

# பறிபோகிறது இருட்டுமடு



முல்லைத்தீவு, ஏப். 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம்கிராம அலுவலர் பிரிவின் இருட்டுமடு கிராமத்தில் ஆற்று வாய்க்காலுக்கு மேல் பக்கமாக பல ஏக்கர் காடுகள் சட்டவிரோதமான முறையில் கனரக இயந்திரங்களின் உதவியோடு இனந்தெரி 06▶

# அரசைக் கவிழ்ப்போம்

## "குறூப் 16" சபதம்



கொழும்பு,ஏப்.25

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் தாம் உறுதியாக உள்ளதாகவும் அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேரும் எதிர்வரும் 8ஆம் திகதி எதிர்க் கட்சியில் அமர்வதாக உறுதியான தீர்மானம் எடுத்துள்ள 06▶

# புத்தர்சிலை விவகாரம் முடிவுக்கு வந்தது



வவுனியா, ஏப். 25

"யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்திலேயே மதத்தலங்களை அமைக்க முடியும்" என வவுனியா பொலிஸார் சிங்கள மாணவர்களிடம் தெரிவித்த நிலையில் இந்த புத்தர்சிலை சர்ச்சை 06▶

## க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு,ஏப்.25

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

"சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் பரீட்சைகள் திணைக்களத்தின் கிளைக்கு அறிவிக்க வேண்டும். தனியார் விண்ணப்பதாரிகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. பாடசாலையை விட்டு விலகி உள்ளவர்கள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்க முடியும். பாடசாலை மாணவராக இருந்துகொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது சட்ட விரோதச் செயலாகும். இந்த விடயம் தெரியவந்தால், அவர்கள் பரீட்சைத் தடைக்கு உள்ளாக நேரிடும்." எனவும் அவர் தெரிவித்தார். (ஆ)

## எமில், ரங்கஜீவவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 25

வெலிக்கடைச் சிறைச்சாலை கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் மற்றும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ ஆகியோருக்கான விளக்கமறியல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு மேலதிக நீதிவான் ரங்க திசாநாயக்க நேற்று பிறப்பித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 27 கைதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## பாக். பிரதமர் – இராணுவத் தளபதி சந்திப்பு



இஸ்லாமாபாத், ஏப்.25

பாகிஸ்தான் பிரதமர் சாஹிட் கான் அப்பாசி - இலங்கை இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தான் இராணுவப் பிரதானியின் அழைப்பை ஏற்று பாகிஸ்தான் தலை நகரத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி, பாகிஸ்தான் பிரதமரை அவரது அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நல்லுறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், பாதுகாப்புப் பிரச்சினைகள், போதைப்பொருள் கடத்தல், புனர்வாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

மேலும், இலங்கை இராணுவம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொது மக்களின் நலனுக்கான மேற்கொள்ளும் பங்களிப்பு, இடம்பெயர்ந்தோரை மீள்குடியேற்றம் செய்தல், வடக்கு , கிழக்கு மாகாணங்களில் சேவை செய்யும் படையினருக்கும், மக்களுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்துதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன .

"இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பாதுகாப்புத் துறையில் பரந்துபட்ட ஒத்துழைப்பு அவசியம். பிராந்தியத்தில் அமைதி நிலவுவதையே விரும்புகின்றோம். இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு திருப்தி அளிக்கிறது." என்று பாகிஸ்தான் பிரதமர் சாஹிட் கான் அப்பாசி தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், இராணுவ சேவா வனிதா பிரிவின் தலைவி சந்திரிகா சேனாநாயக, பாகிஸ்தான் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ஹேமந்த பண்டார, இராணுவத் தளபதியின் செயலாளர் கேர்ணல் உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஆ)




## எதிர்கால சந்ததிக்காக நிலைபேறான எரிசக்தி

கொழும்பு,ஏப்.25

எதிர்கால சந்ததிக்காக நிலைபேறான எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டும். இதை நாடு தற்போது உணர்ந்துள்ளது என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பானதும், நியாயமானதுமான அளவுப் பணத்தைக் கொண்டு பெற்றுக் கொள்ளும் எரிசக்தி குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனினும், துரித மாற்றம் ஒன்றை நோக்கிச் செல்வதற்கு போதியளவு நிதிவளம் இல்லாமல் இருக்கின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். இதற்காக சர்வதேச சமூகமும், கைத்தொழில் நாடுகளும், நிதிவழங்கும் நிறுவனங்களும் முன்வந்து தேவையான வளங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## கைவிடப்பட்ட குளங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு



கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கைவிடப்பட்ட குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

கிளிநொச்சியில் 600 சிறுகுளங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 44 சிறிய குளங்கள் மாத்திரமே விவசாயத்துக்குப் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன. இந்த நிலையில், பாவனையில்லாத குளங்களை அடையாளப்படுத்தி, எல்லையிடும் நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## செத்து மடிந்த மீன்கள்: ஒன்றரைக் கோடி நட்டம்!



சிலாபம்,ஏப்.25

சிலாபம் - மாரவல ஏரியில் உள்ள அனைத்து மீன்களும் திடீரென உயிரிழந்துள்ளன. இதன் காரணமாக சுமார் ஒன்றரைக் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதியில் இருந்து மீன்கள் செத்து மிதக்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அனைத்து மீன்களும் உயிரிழந்துள்ளன.

அந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் ஒவ்வொருவரும் தலா பத்து இலட்சம் ரூபாவை முதலிட்டு மீன்களை வளர்த்து வந்த நிலையிலேயே, குறித்த மீன்கள் உயிரிழந்துள்ளன.

ஏரியில் விஷம் கலக்கப்பட்டு மீன்கள் உயிரிழந்திருக்கலாம் என மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது குறித்த விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஆ)

## போலிக் கையெழுத்திட்ட கல்விப்பணிப்பாளருக்கு சிக்கல்

நிகவரெட்டிய, ஏப். 25

விடுமுறை தினங்களிலும் சேவைக்கு வந்ததாகப் போலியாகக் கையொப்பம் இட்டு சம்பளம் பெற்றுக் கொண்ட நிகவரெட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்பில் விசாரணை செய்யுமாறு அந்த அலுவலகத்தின் பணியாளர்கள் வடமேல் பிரதான செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

நிகவரெட்டிய வலயக் கல்விக் காரியாலயத்தில் சேவையாற்றும் நிர்வாக அதிகாரி எஸ்.ஜீ. விமலசேனவின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர், விடுமுறை தினங்களிலும் சேவைக்கு வந்திருப்பதாக வேறு ஒருவரின் மூலம் கைவிரல் அடையாள இயந்திரத்தில் வரவு பதியப்பட்டுள்ளது. இதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் கைவிரல் அடையாளத்துக்குப் பதிலாக வேறு ஒருவரின் கைவிரல் அடையாளம் அந்த இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தெரியவந்ததை அடுத்து, கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி முதல் அந்த இயந்திரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனினும், இந்த முறைகேடு சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு வலயக் கல்விக் காரியாலய மேலதிகாரிகளிடம் அலுவலக பணியாளர்கள் கேட்டுக் கொண்ட போதிலும், அதற்கு இதுவரை சரியான பதில் கிடைக்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



எதிரொலி
Ethiroli
புதன், 25 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# நிதானம் அவசியம்

விபத்துச் சாவுகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. பெரும்பாலான விபத்துகளுக்கு தனிமனிதத் தவறுகளே முதற்காரணியாக அமைந்து விடுகின்றன. அதிலும் கண்மண் தெரியாத, கட்டுப்பாடற்ற வாகனச் செலுத்துகைகளே உயிரிழப்பு, அங்கவீனம் போன்ற விளைவுகளை விபத்துக்கள் மூலம் அதிகளவில் ஏற்படுத்துகின்றன. நேற்று முன்தினமும் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகச் சென்ற இரு இளைஞர்கள் மின்சாரத் தூணுடன் மோதியதில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அந்தச் சம்பவம் பற்றி நேரில் அவதானித்த ஒருவர் இப்படி அதனை விபரிக்கின்றார்.

"காலை 11.00 மணியிருக்கும் வேலை நிமிர்த்தம் நாவற்குழி ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்தேன். வீதியில் சிறு பதற்றம், அங்கே கண்ட காட்சி என்னைப் பதறவைத்தது.

"2 பேரும் அவுட். கிட்டப்போகாதீங்கோ. பொலிஸூக்கு கோல் பண்ணுங்கோ" என்றார்கள் அங்கே நின்றவர்கள்.. அம்புலன்ஸூக்கு கோல் பண்ணிட்டு, "ஆண்டவா இவர்கள் உயிரோடு இருக்க வேணும்" என்று மன்றாடிக்கொண்டு அருகில் சென்றேன். எங்காவது அசைவு இருக்கிறதா என உற்றுப்பார்த்தேன். கீழே கிடந்தவரின் கால்கள் சற்று அசைவது தெரிந்தது.

"அண்ணை உயிர் இருக்கு. ஓடிவாங்கோ. தூக்குவோம்" என்று கூப்பிட்டேன். சிலரின் உதவியுடன் அவரைத் தூக்கினேன். அவர் கால்கள் எழுந்தமானமாக எல்லாப் பக்கமும் சுழன்றன. ஒரு நல்ல உள்ளம், தான் வந்த வாகனத்தில் ஏற்ற அனுமதித்தார். அடிபட்டுக் கிடந்த மற்றவரை நோக்கிச் சென்றேன் முகம் மீற்றர் பெட்டிக்குள் புதைந்து கிடந்தது. இரத்தம் கொழ கொழ என்று ஓடிக் கொண்டு இருந்தது. ஒரு விக்கல் சத்தம் கேட்டது. என் தலை சுற்றுவது போல் இருந்தது. அதற்குள் அவரையும் இழுத்து எடுத்து ஏற்றினார்கள். வாகனம் பறந்தது அவர்களுக்கு எதுவும் ஆகக்கூடாது என மன்றாடிக்கொண்டு புறப்பட்டேன்.

இதைப் பார்த்த பிறகு என்றாலும், என் உறவுகளே அளவான வேகத்தோடு செல்லுங்கள். நீங்கள் இல்லாமல் உங்களை நேசிப்பவர்கள் வாழ்வு எவ்வாறு அமையும் என்று சிந்தியுங்கள் தய்வு செய்து வீதிச் சட்டங்களைக் கடைப்பிடியுங்கள்..."

இதுதான் அந்த நேரில் பார்த்தவரின் ஆற்றாமைக் குரல்.

ஒவ்வொரு உயிரும் பெறுமதியானது. இறப்பவர்கள் தங்களை மட்டுமல்லாது, தங்களை நம்பியிருப்பவர்களையும், தங்கள் இழப்பால் அவர்களுக்கு உண்டாகும் துயரையும், விளைவுகளையும் வாகனத்தைச் செலுத்தும் போது, கொஞ்சமேனும் நினைத்துப் பார்த்தால், கை 'அக்சிலேட்டரை' முறுக்காது. நிதானமாகச் செல்வதால் அப்படி எந்தவொரு காரியமும் குடிமுழுகிப் போகப்போவதில்லை. வேகமாகச் செல்வதை விடவும் சற்றுத் தாமதமாகச் செல்லவேண்டியிருக்கும். அவ்வளவுதான். வேகமாகச் சென்று ஒரேயடியாக மேலே போவதை விடவும், செல்ல வேண்டிய இடத்துக்கு சற்றுத் தாமதமாகச் செல்வதால் நன்மைதான். சரியான வகையில் நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடித்தால், சீறிக்கொண்டு வாகனங்களைச் செலுத்த வேண்டிய அவசியமும் இருக்கப் போவதில்லை. நிதானம் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, சாரதிகளுக்கும் அவசியம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வு

சுன்னாகம், ஏப். 25

யாழ்.சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

வலி.தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி அ.சுபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன் பிரதம விருந்தினராகவும், சபையின் உப தவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கம், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நூல்கள், சுவடிகள் கொண்ட அலங்காரப் பேழை, இலக்கிய கர்த்தாக்கள், விருந்தினர்கள், வாசகர்கள் உடன்வர நூலக வாசலை வந்தடைந்ததைத் தொடர்ந்து, நூலக முன்றலில் நிறுவப்பட்டுள்ள பிரதேச இலக்கிய முன்னோடி சுன்னாகம். குமாரசுவாமிப் புலவரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன் சிறுவர் நூலகப் பிரிவைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து நூலக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச இலக்கியப் படைப்பாளிகளான சு.ஸ்ரீகுமரன்(இயல்வாணன்), ம.பா.மகாலிங்கசிவம், உடுவில் அ. அரவிந்தன், பதிப்பாளர் மு.கௌரிகாந்தன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து விருதுகள் வழங்கிச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டனர். இலக்கியப் படைப்பாளி பேராசிரியர் கலாநிதி- வ.மகேஸ்வரன் நிகழ்வில் கலந்து கொள்ளாத காரணத்தால் அவருக்கான விருதினை அவரது துணைவியார் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நூலகஞ்சார் பன்முகச் செயற்பாட்டாளர் திருமதி- ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டார்.

# யாழில் 4,104 பட்டதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்த 4 ஆயிரத்து 104 பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இணையம் ஊடாக 3 ஆயிரத்து 425 பேர் பதிவு செய்திருந்தனர். அதனை விட எங்குமே பதிவு செய்யாதோர் 779 பேர் யாழ்.மாவட்ட செயலகத்தில் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மொத்தமாக 4 ஆயிரத்து 104 பட்டதாரிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

பதிவு செய்த அனைவருக்குமான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. வரும் வெள்ளிக்கிழமை நேர்முகப் பரீட்சைப் பணி நிறைவடையும். அவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது புள்ளிகள் வழங்கப்படுகின்றன, அமைச்சின் அறிவுறுத்தலுக்கமையவே அந்தப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. அது தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பருத்தித்துறை இளைஞன் கைது!

கொழும்பு,ஏப்.25

போலி ஆவணங்கள் மூலம், சிங்கப்பூர் செல்ல முயற்சித்த இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்- பருத்தித்துறையைச் சேர்ந்த 25 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞனின் பயணப் பொதியை பரிசோதித்த போது, அதில் சிங்கப்பூரிலிருந்து இங்கிலாந்து செல்வதற்கான விமானபயணச்சீட்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த இளைஞரிடம் இருந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட கடற்படையினரால் வழங்கப்படும் அடையாள அட்டையுடன் கூடிய புத்தகம் உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக குறித்த இளைஞர் விமான நிலைய குற்றவிசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு,ஏப்.25

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மே 8ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற புதிய அமர்வுக்கான ஒழுங்கு படுத்தல்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதாக அந்தத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதற்கான அழைப்பு சபாநாயகரினால் விடுக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றைப் புனரமைக்க 200 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு,ஏப்.25

நாடாளுமன்றத்தைப் புனர்நிர்மாணம் செய்ய 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

30 வருடம் பழைமையான நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் செய்யப்படவேண்டிய பல புனர்நிர்மாண நடவடிக்கைகள் இனங்காணப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, குறித்த புனர்நிர்மாணப் பணிகளுக்காக 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஊடகங்கள் வாயிலாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை எனவும், இவ்வாண்டு புனர்நிர்மாணப் பணிகளுக்காக 200 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று நாளும் கோளும்


25.04.2018 புதன்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 12 ஆம் நாள்

தசமி மு.ப. 11.50 வரை | மகம் பி.ப. 03.55 வரை | குளிகை மு.ப. 10.30-12.00

இராகுகாலம் 12.00- 01.30 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் பி.ப. 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பக்தி | அமைதி | அலைச்சல் | ஆதாயம் | கவனம் | மகிழ்ச்சி | எதிர்ப்பு | ஊக்கம் | கோபம் | உயர்வு | சுகம் | போட்டி |

# இடப்பெயர்வுப் பதிவு கால எல்லை நீடிப்பு



கொழும்பு,ஏப்.25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு நீண்ட காலமாக உள்ளக இடப்பெயர்வால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பதிவு செய்யும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

மோதல் காரணமாக 1990 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு உள்ளக ரீதியாக இடம் பெயர்ந்தவர்களின் நேரடிச் சந்ததியினர், இந்தத் தொகைக் கணிப்பில் பங்குபற்ற முடியும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தொகைக் கணிப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை அண்டிய மாவட்டங்களான புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை, மொனராகலை அம்பாறை, பதுளை ஆகிய அச்சுறுத்தலுக்கு உள்ளான கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களும் பங்குபற்ற முடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் www.taskforcepidp.lk, www.resettlementmin.gov.lk என்ற இணையதளம் ஆகியவற்றின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



# போதைப்பொருட்களுடன் ஐந்து பேர் கைது

ஹட்டன், ஏப். 25

ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருட்களை வைத்திருந்த 5 பேரை ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்

ஹட்டன் குடாகம, கொட்டகலை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஆயிரத்து 210 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 5 ஆயிரத்து 200 மில்லி கிராம் கேரளக் கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரையும், ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கஜமுத்துக்களுடன் மூவர் சிக்கினர்



புத்தளம், ஏப். 25

தம்புள்ளைப் பகுதியில் 70 இலட்சம் ரூபா பெறுமதியான கஜமுத்துக்களுடன் சந்தேக நபர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும், மேலும் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யால தேசிய வனப் பகுதியில் இருந்த யானை ஒன்றைக் கொன்றே, இந்தக் கஜமுத்துக்களை அவர்கள் பெற்றுகொண்டனர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ஆ)

# கிளி. மாவட்டத்தில் உரமானியத் திட்டம்

கிளிநொச்சி, ஏப்.25

கிளிநொச்சி மாவட்டத்தில்கடந்த ஆண்டு காலபோக செய்கையில் ஈடுபட்ட 16 ஆயிரத்து 504 விவசாயிகளுக்கு, 312 மில்லியன் ரூபா நிதி உரமானியத்துக்காக வழங்கப்பட்டுள்ளது என மாவட்டக் கம நல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கால போகச் செய்கைகளுக்கான உரமானியக் கொடுப்பனவுகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டன. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கைகளுக்கான உரமானியம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் கம நல அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது." எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கைவிடப்பட்ட சிசு உயிரிழப்பு!



கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சிசு ஒன்று உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி மீட்கப்பட்ட குறித்த சிசு, கிளிநொச்சி வைத்தியசாலை நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிசு உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சிசுவின் பெற்றோர் அடையாளம் காணப்படாமையால் குறித்த சடலத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க முடியாத நிலையில், வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# மாணவர் சீருடை வவுச்சர் பெறுமதி அதிகரிப்பு



கொழும்பு,ஏப்.25

எதிர்காலத்தில் பாடசாலை சீருடைகளுக்கான வவுச்சர்களின் பெறுமதியை அதிகரிப்பது குறித்துக் கவனம் செலுத்தப்படுவதாகவும் வவுச்சர் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

புத்தக விநியோகத்தில் தரம் பத்து, தரம் 11 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புதிய புத்தகங்களை வழங்குமாறு கல்வியமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வருடாந்தம் சராசரியாக பத்தாயிரம் ஆசிரியைகள் பேறுகால விடுமுறைகள் உள்ளிட்ட விடுப்புக்களில் செல்கிறார்கள்.

இந்த சமயத்தில் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க கல்வி வலய மட்டங்களில்ஆசிரியர் குழாம்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போலி நாணயத் தாள்களுடன் இருவர் கைது

அம்பாறை, ஏப்.25

அம்பாறை - தமன பிரதேசத்தில் இருந்து 5000 ரூபா பெறுமதியான 14 போலி நாணயத் தாள்களை வைத்திருந்த, சந்தேகநபர்கள் இருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமன பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# முல்லை., மன்னாரில் அபிவிருத்தி!

கொழும்பு, ஏப். 25

மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என அந்த அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக்காக முதலாம் காலாண்டில் 19 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ் மாந்தை மேற்கு, மன்னார் நகரம் போன்றவற்றில் இறால் வளர்ப்புத் திட்டம், மீன்பிடி நிலையம், கடற்கரை வீதி அபிவிருத்தி, மீன்பிடிப் படகு போன்றவை அமைக்கப்பட உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்தாங்கிகள் உள்ளடங்கலாக நீர் வழங்கல் வசதிகளுக்காக 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடக்காடு, மாந்தை கிழக்கு, நந்தகுமாரன் நகர், துணுக்காய், கிச்சிரபுரம், மரிடைம் பற்று, நீராவிப் பிட்டி, செல்வபுரம், ஒட்டுசுட்டான் மற்றும் வெலியோயா, இசுறுபுரம், பன்குளுபுர, சங்கபோபுர பிரதேசங்களுக்கு இந்த நீர் வழங்கல் வசதிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களுக்காக 17 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# எமனானது இறைச்சி

ஹல்துமுள்ளை, ஏப்.25

ஹல்துமுள்ளைப் பகுதியில் இறைச்சித் துண்டு ஒன்று தொண்டையில் சிக்கியதால், பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஹல்துமுள்ளை - புஸல்லாவையைச் சேர்ந்த எஸ். எம். சோமாவதி (வயது- 58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்றுக் காலை இறைச்சியைச் சமைத்துக் கொண்டிருந்தபோது, சுவைத்துப்பார்ப்பதற்காக ஒரு துண்டைச் சாப்பிட்டுள்ளார். இதன்போதே இறைச்சி தொண்டையில் சிக்கி அவதிப்பட்டுள்ளார். இதனை அடுத்து, அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹல்துமுள்ளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

திருகோணமலை, ஏப்.25

திருகோணமலை- புல்மோட்டை பிரதான வீதி, இக்பால் நகர் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று, பெண் ஒருவரின் மீது மோதி விபத்துக்குள்ளானதில், குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த அப்துல்ஹமீட் சஹறு உம்மா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி தப்பிச்சென்றுள்ளதாகவும், அவருடன் பின்னால் உட்கார்ந்து சென்ற 19 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)

# போதைப் பொருளுக்கு எதிராக வாழைச்சேனையில் பேரணி





வாழைச்சேனை,ஏப்.25

போதைப் பொருள் பாவனைக்கு எதிராக வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரால் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பேரணி "போதைப் பொருள் பாவனையில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்போம்" என்னும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் என்.எம்.கஸ்ஸாலி தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.அஜ்மீர், ஆசிரிய ஆலோசகர் எம்.சபூர், வாழைச்சேனை பள்ளிவாசல் தலைவர் மௌலவி. எம்.முஸம்மில், பொலிஸார் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையில் இருந்து ஆரம்பமான இந்த போதை ஒழிப்புப் பேரணி வாழைச்சேனை சந்தை வழியாகச் சென்று பிரதேசசபை வீதியினூடாகப் பாடசாலையைச் சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து, அங்கு விழிப்புணர்வுக் கூட்டம் இடம்பெற்றது.

"மட்டக்களப்பு மாவட்டத்திலேயே வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பிரிவில்தான் அதிகமான போதைப் பொருள் பாவனையாளர் உள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னிரண்டு பொலிஸ் நிலையங்கள் உள்ளன. அதில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் மாத்திரம் போதைப் பாவனை தொடர்பான முறைப்பாடுகள் அதிகமாகக் கிடைத்துள்ளன. அதிலும் குறிப்பாக போதை மாத்திரைகளை பாடசாலை மாணவர்களே அதிகம் பாவிக்கின்றனர் . மாணவர்கள் தொடர்பில் பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும்." என்று வாழைச்சேனைப் பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.சிவதர்சன் தெரிவித்துள்ளார். (ஆ)

# 36,500 கருக்கலைப்பு

கொழும்பு, ஏப். 25

நாட்டில் வருடம் 36 ஆயிரத்து 500 கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என டொக்டர் மெக்ஸி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கத்தோலிக்கச் சபையின் ஏற்பாட்டில் பொரளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் சட்ட விரோதக் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன. நாடளாவிய ரீதியில் சுமார் 40 ஆயிரம் சட்ட விரோதக் கருக்கலைப்பு வைத்தியர்கள் செயற்படுகின்றனர். தற்போது சட்ட விரோதக் கருக்கலைப்புகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இந்த சட்டவிரோதக் கருக்கலைப்புகள் அங்கீகரிக்கப்படாத இடங்களில், தகுதியற்ற நபர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச வைத்தியசாலைகளிலும், பிரபல தனியார் வைத்தியசாலைகளிலும் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன. இதற்காக வைத்தியர்கள் பயன்படுத்தும் உபகரணங்களால் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. பெரும்பாலும் பதிவு செய்யப்படாத மருந்துகளே வழங்கப்படுகின்றன.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு சரியான பாலியல் கல்வி அவசியம் . இளைஞர், யுவதிகளுக்கும் குடும்பக் கட்டுப்பாடு தொடர்பிலான தெளிவுபடுத்தலும் அவசியம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# தாயகம் திரும்பியோர் யாழில் மீள் குடியேறத் தயார்

யாழ்ப்பாணம்,ஏப்.25

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 110 குடும்பங்கள், யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறுவதற்குப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"காணிகள் இல்லாத 25 குடும்பங்களுக்கு காணியுடன் சேர்ந்த புதிய வீட்டுத் திட்டத்தை முதற்கட்டமாக உரும்பிராயில் வழங்கத் தனியார் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. இந்தத் திட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். ஆயிரத்து 110 குடும்பங்கள் தற்போது மீள்குடியேறுவதற்கு தயார் நிலையில் இருக்கின்றனர். இதில் முதற்கட்டமாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 80 குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்காக வீடமைப்பு அதிகார சபை, மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக இந்த வீட்டுத்திட்டங்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# அரச முகாமைத்துவ உதவியாளர்கள் இணைப்பு


கொழும்பு,ஏப்.25

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிதாக 5 ஆயிரத்து 432 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இவர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரச முகாமைத்துவ நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் ஒன்றிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம் கே.பி.எம். கமகே தெரிவித்தார்.

இதற்கமைவாக வரையறுக்கப்பட்ட பிரிவில் இந்தச் சேவைக்காக ஆயிரத்து 377 பேரும், பகிரங்கப் போட்டிப் பரீட்சையின் மூலம் 4 ஆயிரத்து 550 பேரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் அரச முகாமைத்துவ சேவையில் 6 ஆயிரத்து 139 வெற்றிடங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மதுபான சாலைகளுக்கு ஒரு வாரத்துக்குப் பூட்டு



கொழும்பு, ஏப். 25

வெசாக் உற்சவத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் ஒரு வாரத்துக்கு மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கு இலங்கை மது வரித்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மது வரித்திணைக்கள ஜெனரல் ஆர். சேமசிங்கவின் ஆலோசனையின் கீழ் இந்த விஷேட செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

மது வரித்திணைக்களத்தால் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல், அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை அனுமதிப்பத்திரம் அற்ற மது விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக மது வரித்திணைக்களத்தின் சட்ட செயற்படுத்தல் பிரிவின் கீழ் விசேட அதிகாரிகள் கொண்ட குழுவும் நியமிக்கப்பட உள்ளது.

மேலும், இந்த விசேட நடைமுறைகளை சிறப்பாக முன்னெடுக்கப் பொது மக்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக தகவல்களை தெரிவிப்பதற்காக 24 மணித்தியால விசேட சேவையும் செயற்படுத்தப்பட உள்ளது.

சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக 011-2045077 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமும் 011-2877882 என்ற தொலைநகல் இலக்கத்தின் மூலமும் அறியத்தர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



# கண்ணா மூச்சி விளையாட்டு... இது கண்ணா..?

இனிமேல் என்ன பிழையும் விடலாம். அதிலை அம்பிடாமல் இருக்க வேணும் எண்டால் நீ ஒண்டில் அரசியல்வாதியின்ரை சொந்தக்காரனா இருக்க வேணும். இல்லாட்டிப் பிழையைச் செய்து போட்டுப் பிடிபட முன்னம் வெளிநாட்டுக்கு ஓடி விட வேணும். இஞ்சை நிக்கப்படாது. விளங்கிதோ, முதலி? எண்டு சொன்னதுதான் தாமதம், என்ன என்னை அவ்வளவு சீப்பா நினைச்சுக் கொண்டியோ அண்ணை? எண்டு சீறிப்பாஞ்சானே வடுவா! முதலிக்கு அந்தளவு ரோஷம் பொத்துக் கொண்டு வந்திட்டுது.

பிறகு ஆளைச் சமாதானப்படுத்தி ஒரு மாதிரி விசியத்தை விளங்கப்படுத்தினன். ராஸபக்ச ஜனாதிபதியா இருந்த காலத்திலை ரஸ்யாவிலை தூதுவரா இருந்தவர் உதயங்க வீரதுங்க எண்ட அவற்றை சொந்தக்காரர்.. அப்ப அவர் அங்கை இருக்கேக்கை இஞ்சை அமளிச் சண்டை நடந்து ஓஞ்ச நேரம். அப்ப இலங்கை விமானப்படைக்கு போர் விமானங்களை வேண்ட வேணும். இனிமேல் தற்செயலாச் சண்டை எண்டு வந்திட்டால் சண்டைக்கு எல்லாம் தேவை, அதோடை எங்கடை ஆமி நேவி எயார் போஸ் எண்டு எல்லாத்தையும் பெலப்படுத்த வேணும். நாங்கள் அக்கறை இல்லாமல் இருக்கேலாது எண்டு கோத்தா சொல்ல தமையனும் ஆமாப் போட்டு ரஸ்யாவோடை ஒரு வியாபார ஒப்பந்தத்தைப் போட்டினம். அந்த ஒப்பந்தம் தொடர்பா, அதுக்குரிய எழுத்து வேலை குடுக்கல் வாங்கல் பேச்சு வார்த்தை எல்லாத்தையும் உந்த உதயங்காதான் செய்தவராம். அவர் அங்கை பொறுப்பானவரா இருந்தபடியாலும், மகிந்தான்ரை சொந்தம் எண்டபடியாலும், உள்கதை வெளியாலை வராது எண்டு நினைச்சுக் கொண்டு அவரைக் கொண்டே சகல விளையாட்டையும் காட்டினவையாம். அப்பிடிச் செய்யேக்கை பாம்பின்ரை காலைப் பாம்பறியும் எண்டமாதிரி, உதயங்காக்கு மகிந்தான்ரை எண்ணம் என்னெண்டு விளங்குமெல்லே! மகிந்த சிந்தனைப்படி அந்த போர் விமான வியாபாரத்திலை எனக்கும் வையுங்கோ, அவைக்கும் புறம்பா வையுங்கா. இன்னும் கொஞ்சமும் வையுங்கோ. அதை ஆருக்கெண்டு பிறகு சொல்லுறம் எண்டு பெரிய காசை இடையிலை வைச்சு இப்ப ஜனாதிபதியா மைத்திரி வந்த உடனை அதைப் பற்றி விசாரணை தொடங்கி மகிந்தா காரர் எல்லாம் மாட்டுப்பட்டிட்டினம். அதாலை உதயங்காவின்ரை கதையும் வெளியிலை வர உதயங்காவை விசாரிக்க வேணும் கொண்டு வாங்கோ எண்டு கோட்டின்ரை ஓடர் எடுத்தும் அவரைக் கொண்டு வர படாதபாடு படுகினம். முடியாமல் ஏதோ ஒண்டு இடையிலை குறுக்கை நிக்குதாம். அது என்னெண்டு தெரியேல்லை எண்டு எல்லாரும் கதைக்கினம்.

இஞ்சை விசாரணை துவங்கின உடனை உதயங்காப் பிள்ளை என்ன செய்தாரெண்டால் தானிருந்த உக்கிரைன் எண்ட இடத்திலை இருந்து துபாய்க்கு வந்து அங்கை இருந்து அமெரிக்காவுக்குப்போக வரேக்கை இலங்கையிலை தேடப்படுகிற ஆள்தான் உவர் எண்டு அங்கை உள்ள பொலிஸ்காரர் கண்டுபிடிச்சு ஆளைப் பிடிச்சு வைச்சிட்டினம். வைச்சுக் கன நாள் ஆச்சு. இப்ப அவரை நாடு கடத்த அவை பர்றபாடு என்னெண்டு நினைக்கிறியள்? ஆரோ முட்டுக்கட்டை போடினமாம்?

கிட்டடியிலை நடந்த உள்ளூராட்சி எலக்சனிலை மகிந்தாவின்ரை ஆக்கள் வெண்ட உடனை உதயங்கா போன் போட்டுக் கதைச்சவராம். மகிந்தா சொன்னவராம் "ஒண்டுக்கும் பயப்பிடாதை. கிட்டியிலைடி நாங்கள் திரும்பவும் வந்திடுவம். வந்த உடனை விசாரணை ஒண்டும் நடவாது. அதுக்குரிய பைலுகளை எல்லாம் பழம் பேப்பர்காரருக்குப் போட்டிடுவம். பிறகு நீ ஒரு சுதந்திரப் பறவை எடா உதயங்கா"- எண்டு சொன்னவராம். அதாலை எப்பிடியாவது ஆளைக் கொண்டு வாற விளையாட்டை தள்ளிக் கொண்டு போறதுதான் அவையின்ரை திட்டமாம்.

உப்பிடி எத்தினை திட்டம் கையிலை வைச்சிருக்கினமோ தெரியாது. ஆனால் பெரிய விளையாட்டுக்காட்டிக் கோடி கோடியா ஏப்பம் விட்ட எல்லா வழக்கும் உதுமாதிரித்தான் இழுபடும்போலை கிடக்கு. கள்ளர் எல்லாம் தப்பி விடுவினம். கடைசியாச் சனத்துக்குத்தான் நாமம் வைப்பினம் போலை தெரியிது. கொஞ்ச நஞ்சக்காசே அடிபட்டது. எங்களுக்கு பல வருசத்துக்குக் காணுமான சாப்பாட்டுக் காசை எல்லே ஏப்பம் விட்டிட்டு கண்பொத்தி விளையாடினம்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## கோத்தாவை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சவை கைது செய்வதற்கு தயக்கம் காட்டி வரும் அரசாங்கம், அவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பதற்கான முயற்சியா அதற்குக் காரணம் என்றும் அருட்தந்தை சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடை சிறையில் இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் இடம்பெற்றது. இந்த வழக்கில் பிரதான சந்தேக நபராகக் காணப்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நியூமல் ரங்கஜீவ, படுகொலை இடம்பெற்ற போது சிறைச்சாலை ஆணையாளராக இருந்த எமில் ரஞ்ஜன் லமாஹேவா ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் மே 8ஆம் திகதிவரை நீடிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் வெலிக்கடை படுகொலைக்கு காரணமானவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுவரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவையும் கைது செய்யும்படியும், படுகொலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குமாறும் கோரி கொழும்பு மேலதிக நீதிமன்றத்துக்கு முன்பாக அமைதிப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கம், சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு என்பன இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. வெலிக்கடை சிறைப்படுகொலையின் போது கொல்லப்பட்ட கைதிகளின் உறவினர்கள் பலரும் இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தில் சுலோகங்களை ஏந்தியவாறு ஈடுபட்டிருந்தனர்.

## அரசை கவிழ்ப்போம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் மஹிந்த அணியுடன் சேர்வது தொடர்பில் இதுவரையில் எந்தவித கலந்துரையாடலும் இடம்பெறவில்லையெனவும் குழுப் 16 எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோலிய வளத்துறை முன்னாள் அமைச்சர் சந்திம வீரக்கொடி மற்றும் முன்னாள் அமைச்சர் டபிள்யு. டீ.ஜே. செனவிரத்ன இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் பலர் விரைவில் எம்முடன் வந்து இணைந்துகொள்வார்கள்.

நாம் ஒருபோதும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப்போவது இல்லை.

"நாங்கள் 8ஆம் திகதி எதிர்க்கட்சி வரிசையில் அமருவோம். அந்தத் தீர்மானத்தில் எவ்வித மாற்றங்களும் இல்லை. லண்டனில் ஜனாதிபதியுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினோம். இதன்போது சாதகமான பதில்கள் கிடைத்தன. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கே நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்தோம்" என்றனர்

## வச்சகுறி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபாடுகள் காணப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

13வது அரசியலமைப்பு நடைமுறையில் இருக்கும் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்வது எவ்விதத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தாது என்பது எனது தனிப்பட்ட கருத்தாக காணப்படுகின்றது.

கூட்டு எதிரணியினர் மக்கள் விடுதலை முன்னணியின் யோசனைக்கு ஆதவராக செயற்பட்டால் தேசிய சுதந்திர முன்னணி கூட்டு எதிரணிக்கு எதிராக செயற்படுவதாக அதன் தலைவர் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமற்றதாக காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

## சீ.வி,கேயின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் இறுதிக் கிரியைகள் கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நாளை மறுதினம் இடம்பெறும் என குடும்பத்தார் அறிவித்துள்ளனர்.

## புத்தர் சிலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தில் விகாரை அமைப்பதற்கு சிங்கள மாணவர்கள் நேற்று முன்தினம் முயற்சிகளை மேற்கொண்ட போது, வளாக நிர்வாகத்தினால் அம் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து வளாகத்தின் உத்தியோகத்தர்கள், பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்களுடன் சிங்கள மாணவர்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக வவுனியா வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக வளாகத்தின் முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் அறிவித்ததுடன் விடுதியில் உள்ள மாணவர்கள் அனைவரையும் விடுதியை விட்டு வெளியேறுமாறும் பணித்திருந்தார்.

இந்நிலையில் பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் நிர்வாக கட்டடத்தொகுதியை சூழ்ந்துகொண்ட சிங்கள மாணவர்கள் உத்தியோகத்தர்களை வெளியேற விடாமல் தடுத்திருந்தனர். இதனால் முதல்வர் பொலிஸாருக்கு அறிவித்து உத்தியோகத்தர்களை பாதுகாப்பாக வெளியேற ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று காலையில் இருந்து நிர்வாக கட்டடத்தொகுதி அமைந்துள்ள பகுதியை சூழ்ந்து கொண்ட சிங்கள மாணவர்கள், தாம் கொண்டு வந்த ஆலய வடிவிலான கூட்டினை தருமாறு கோரி வீதியோரத்தில் அமர்ந்திருந்தனர்.

இதன்போது வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அடங்கிய பொலிஸ் குழுவுக்கும் வளாகத்தின் முதல்வருக்குமிடையில் சுமார் 1 மணி நேரமாக சந்திப்பு இடம்பெற்றதன் பின்னர் மாணவர்களை சந்தித்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் வளாகத்தில் மத தலங்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலேயே வணக்கத்தலங்களை அமைக்க முடியும்.

அதற்கு பல்கலைக்கழக மேலிடத்தில் இருந்து அனுமதி கிடைக்கவேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெற்றால் அரை ஏக்கர் வீதம் நான்கு மதங்களுக்குமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் வணக்கத்தலங்கள் அமைக்கப்படும். அதுவரை எவ்வித முரண்பாடான நிலைமைக்கும் செல்லக்கூடாது என தெரிவித்ததுடன், சிங்கள மாணவர்களால் கொண்டு வரப்பட்ட புத்தரை வைப்பதற்கான கூட்டினை பொலிஸார் வளாக நிர்வாகத்திடமிருந்து தமது பொறுப்பில் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் மாணவர்கள் தாம் விடுதியில் தங்குவதற்கு ஏற்பாட்டினை செய்து தரவேண்டும் என பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக வளாக முதல்வருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்தின் படி செயற்படுமாறு பொலிஸார் தெரிவித்தனர்.

## பறிபோகிறது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாதவர்களால் அழிக்கப்படுகின்றன. இதனை அரச அதிகாரிகள் கண்டும் காணாதது போல் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

எமது சுதந்திரபுரம் கிராமத்தில் உள்ள சிரட்டை பறிச்சான் குளம் இந்த இடத்துக்கு அருகிலேயே உள்ளது. ஆனால் இதன்கீழ் உள்ள அனுமதிப்பத்திரம் வயல் நிலங்களை செய்கைபண்ண பலதடவைகள் அபிவிருத்தி குழு கூட்டங்களில் கலந்துரையாடி கூட தீரவில்லை.

இவ்வாறிருக்க பாரிய மரங்களுடன் கூடிய பல ஏக்கர் காடுகளை கனரக இயந்திரங்கள் கொண்டு இடித்து அழிக்கும் போது அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருப்பது சந்தேகம் அளிக்கிறது. இந்தக் காடழிப்பை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மக்களால் வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனுக்கு முறையிடப்பட்டதை அடுத்து குறித்த இடத்தை பார்வையிட்ட உறுப்பினர் ஊடகத்துக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"சுதந்திரபுரம் கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட இருட்டுமடு கிராமத்துக்கு அண்மிய காட்டுப்பகுதியில் மூங்கிலாற்றின் நிலப்பரப்பில் ஆத்தோரங்களில் இருக்கக்கூடிய காடுகள் இனம் தெரியாவர்களினால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அந்த கிராம மக்கள் கடந்த 05 ஆம் திகதியில் கனரக இயந்திரங்கள் கொண்டு சட்டவிரோதமான முறையில் யாரோ காடு அழிக்கின்றார்கள் என்று முறைப்பாடு செய்தனர்.

இந்த மக்களின் காணிகளுக்கான அனுமதிப்பத்திரம்கூட இருக்கின்றது. அந்த மக்கள் காடுகளை அகற்ற வனவள பாதுகாப்பு பிரிவினர் தடையாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு இருக்கும் போது இந்த இடத்தில் 15 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் இடிக்கப்பட்டுள்ளன. இதனால் பெரிய மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. சிறிய ஆறுகள் மூடப்பட்டுள்ளன.

இது அரச அதிகாரிகள் மற்றும் வனவள திணைக்களத்தின் ஒத்துழைப்புடன்தான் நடைபெறுகின்றது என்று தெரிவித்தார்.

## முல்லை சிறுமி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியங்காட்டு பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த குறித்த சிறுமி மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது என யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமி தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில். முல்லைத்தீவு முள்ளியவளையில் வசிக்கும் சிறுமியின் தாயார் சிறுவர் பாதுகாப்பு பிரிவினரிடம் தனது மகளை கண்டுபிடித்து தரும்படி நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஒக்ரோபரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடலாம்.

இந்தவருடம் தேர்தலை நடத்தும் வகையில் தேவையான ஆயத்தங்களை செய்யுமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவபடுத்தும் கட்சிகளின் செயலாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை தற்போது நடத்த தேர்தல்கள் ஆணையகம் விரும்புகிறது.

ஒரு மேற்பார்வை குழு அமைக்கப்பட்டு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படுமாக இருந்தால் ஏனைய மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒக்டோபர் மாதம் நடத்தப்படும் என அவர்மேலும் தெரிவித்தார்.

## சுதந்திரபுரத்தில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 15 வயதுடைய சத்தியசீலன் கிருஜன்( வயது15 ) என்பவர் கடந்த 22 ஆம் திகதி உடையார்கட்டு பகுதியில் உள்ள கணனி கற்கை நிலையத்துக்கு சென்று வந்து சுதந்திரபுரம் சந்தியில் அமைந்துள்ள சிறிய தந்தையின் வீட்டில் உணவருந்திவிட்டு 2 மணியளவில் வீடு செல்வதாக தெரிவித்து விட்டு சென்றவர் வீடு வந்து சேரவில்லை என தந்தையார் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தந்தை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வித்தியாவின் சகோதரிக்கு அரச பணி



கொழும்பு,ஏப்.25

படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் - புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதனின் மூத்த சகோதரியான யாழ். பல்கலைகழகப் பட்டதாரி நிஷாந்தி சிவலோகநாதனுக்கு அபிவிருத்தி அலுவலர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் தனது நியமனத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடம் ஜனாதிபதி வவுனியாவுக்குச் சென்றிருந்த வேளையில், மாணவி வித்தியாவின் வீட்டுக்குச் சென்று அந்தக் குடும்பத்தினரின் சுக, துக்கங்களை கேட்டறிந்தார். அப்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்ப இந்த நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் , மாணவி வித்தியாவின் தாயாரான சரஸ்வதி சிவலோகநாதன் மற்றும் நிஷாந்தி சிவலோகநாதன், பிரபல திரைப்பட கலைஞர் சுவினீதா வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஆ)

# மரண அறிவித்தல்



## அமரர் அன்ரன் அனஸ்ரீன் தயாளினி

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அன்ரன் அனஸ்ரீன் தயாளினி அவர்கள் நேற்று முன்தினம் (23.04.2018) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவமங்கள நாதன் - திரவியம் ஆகியோரின் அன்பு மகளும், ஞானப்பிரகாசம் - ருக்மணி ஆகியோரின் அன்பு மருமகளும், அன்ரன் அனஸ்ரீனின் பாசமிகு மனைவியும், டேனுஜன் (மாணவன், யாழ் / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சலோசிகன் (மாணவன், CSI முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாளன் ( தனியார் நிறுவனம் ), தர்சினி ( ஆசிரியை, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியசாலை), தாரணி, (கிராம சேவையாளர், உடுவில்), தயானந்தி ( அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்குவேலி ), தயானந்தன் ( பெந்தகோஸ்து சபை ஊழியர் ) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெறால்ட் அனஸ்ரீன், மேரி டொமின்றில்டா, மேரி யூப்றேசியா (ஆசிரியை, யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்தினியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சண்டிலிப்பாயிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து இன்று காலை (25.04.2018 புதன்கிழமை) 10 மணிக்கு சண்டிலிப்பாய் புனித திரேசாள் ஆலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கத்துக்காக பண்டத்தரிப்பு புனித பற்றிமா சேமச்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்திரர்

# கேளிக்கை விடுதியில் தீ: 18 பேர் உடல் கருகிப் பலி!




## சீனாவில் துயரம்

பீஜிங், ஏப். 25

சீனாவில் இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி, 18 பேர் உடல்கருகிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தின் குயிங்யுவான் நகரில், இரவு நேரக் கேளிக்கை விடுதி ஒன்று அமைந்துள்ளது. இங்கு நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 5 பேர் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் பாதுகாப்பு விதிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவது இல்லை. இதனால், அந்த நாட்டில் தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் கடந்த 2015 ஆம் ஆண்டு தாதியர் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 பேர் பலியான சம்பவம் குறிப்பிடத்தக்கது. (ஆ)

## உலகின் முதலாவது ஆணுறுப்பு மாற்றுச் சிகிச்சை

வொஷிங்டன், ஏப்.25

அமெரிக்காவின் மேரிலாந்து மாகாணத்தை சேர்ந்த மருத்துவர்கள் ஆப்கானிஸ்தானில் நடந்த குண்டு வெடிப்பில் காயமடைந்த அமெரிக்க இராணுவ வீரர் ஒருவரின் ஆணுறுப்பு மற்றும் விதைப்பை மாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர் எனத்



தெரிவிக்கப்படுகிறது.

11 மருத்துவர்கள், சுமார் 14 மணிநேரத்துக்கும் அதிகமாக செலவு செய்து மேற்கொள்ளப்பட்ட இந்த அறுவை சிகிச்சைதான், உலகின் முதலாவது ஆணுறுப்பு மற்றும் விதைப்பை மாற்று அறுவை சிகிச்சை என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## பக்ரு மீண்டும் கின்னஸ் சாதனை

கேரளா, ஏப்.25

மலையாளத் திரையுலகில் நகைச்சுவை கலந்த குணச்சித்திர நடிகராக இருப்பவர் அஜய்குமார் என்கிற கின்னஸ் பக்ரு. தமிழில் 'டிஷ்யூம்' படத்தில் ஜீவாவுடன் இணைந்து நகைச்சுவையில் கலக்கிய இவர், 'காவலன்' 'அற்புதத் தீவு' உள்ளிட்ட சில தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார்.

கடந்த சில வருடங்களுக்கு முன் மலையாளத்தில் 'குட்டியும் கோலும்' என்கிற படத்தின் மூலம் இயக்குநராகவும் மாறினார். ஏற்கனவே அற்புதத் தீவு படத்தில் நடித்ததன் மூலம் மிகவும் உயரம் குறைந்த நடிகர் என்ற கின்னஸ் சாதனையை இவர் படைத்தார். அப்போதிருந்து இவர் 'கின்னஸ் பக்ரு' என அழைக்கப்பட்டு வருகிறார். இந்த நிலையில், இவர் இயக்கிய குட்டியும் கோலும் படம் மூலம் மிகவும் உயரம் குறைந்த இயக்குநர் என்கிற கின்னஸ் விருதையும் தற்போது பெற்றுள்ளார்.(ஆ)

## வில்லியம் - கேத் தம்பதிக்கு மூன்றாவதாக குட்டி இளவரசர்



லண்டன், ஏப். 25

பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதிக்கு மூன்றாவதாக ஆண் குழந்தை பிறந்துள்ளது என கென்சிங்டன் அரண்மனை செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் குட்டி இளவரசரின் முதல் புகைப்படம் வெளியாகி உள்ளது.

பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதிக்கு ஏற்னவே ஜோர்ஜ் என்ற மகனும், சார்லட் என்ற மகளும் உள்ளனர். மூன்றாவது முறையாகக் கர்ப்பமாக இருந்த கேத் மிடில்டன் பிரசவத்துக்காக நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனை அடுத்து, கேத் மிடில்டனுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. தாய் மற்றும் சேய் ஆகியோர் நலமாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த இளவரசர் வில்லியம், தாம் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், ஆனால் அதே அளவு கவலையும் தொற்றிக் கொண்டுள்ளது எனவும் குறும்பாகத் தெரிவித்துள்ளார்.

குட்டி இளவரசர் 3.8 கிலோ நிறை இருப்பதாகவும், சராசரியாக பிரிட்டனில் பிறக்கும் குழந்தைகளின் நிறை 3.5 கிலோ எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஆ)

## கனடாவில் விபத்து: 9 பேர் உயிரிழப்பு



டொரோண்டோ, ஏப்.25

கனடாவின் மத்திய டொரோண்டோ பகுதியில் பாதசாரிகள் மீது ட்ரக் மோதி விபத்துக்குள்ளானதில், 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ட்ரக் சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், விபத்து நடந்த இடத்தில் இருந்து குறித்த சாரதி தப்பிச் சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

## வைத்தியசாலையில் புஷ்

வொஷிங்டன், ஏப்.25

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபுல்யூ. புஷ் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் ( வயது-93). இவருடைய மனைவி பார்பரா புஷ் (வயது-92). இவர்களுடைய மகன் ஜோர்ஜ் வாக்கர் புஷ் (வயது-71), அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஆவார். பார்பரா புஷ் கடந்த செவ்வாய்க் கிழமை உயிரிழந்தார்.

இந்த நிலையில், ஜோர்ஜ் ஹெர்பர்ட்



வாக்கர் புஷ் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது உடலில் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஆ)

## முருகன் மௌன விரதம்

வேலூர், ஏப்.25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகன், திடீரென மௌன விரதம் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்ற கைதி முருகன் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில் தண்டனை அனுபவிக்கும் முருகனின் மனைவி நளினி, பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஆன்மீகத்தில் அதிகமாக நாட்டம் கொண்ட முருகன், எப்போதும் காவி உடை அணிந்தே இருப்பார்.


கடந்த ஆண்டு முருகனின் அறையில் 2 கைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுதொடர்பான வழக்கு விசாரணை



வேலூர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த நிலையில், முருகன் திடீரென மௌன விரதம் மேற்கொண்டுள்ளார். தனது மன அமைதிக்காகவே முருகன் மௌன விரதம் இருப்பதாக சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# சன்ரைசர்ஸ் துல்லியம்: மும்பை சொதப்பல்



மும்பை, ஏப்.25

ஐ.பி.எல் தொடரில் ஹைதராபாத் அணியிடம் இரண்டாவது தடவையாகவும் மண்டியிட்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

மும்பை வான்கடே மைதானத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதிக் கொண்டன. ஏற்கனவே இவ்விரு அணிகளும் மோதிய போட்டியில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றிருந்தது. எனவே மும்பை அணியின் ஆலோசகரான சச்சின் டெண்டுல்கரின் பிறந்த நாளான நேற்று, ஹைதராபாத்துக்கு பதிலடி கொடுத்து பிறந்தநாள் பரிசு வழங்கும் உத்வேகத்தோடு மும்பை அணி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி, ஹைதராபாத்தை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

ஹைதராபாத் அணியின் தவான், வில்லியம்சன் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர்.

தவான் 5 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து களமிறங்கிய சாஹா ஓட்டமேதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 29, மணிஷ் பாண்டே 16, ஷாகிப் அல் ஹசன் 2, முகம்மது நபி 14 , ரஷித் கான் 6 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

கடைசிக் கட்டத்தில் யூசுப் பதான் 29 ஓட்டங்கள் எடுக்க ஹைதராபாத் அணி 118 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மும்பை அணி தரப்பில் மெக்லீனன், ஹர்திக் பாண்டியா, மார்கண்டே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

போகிற போக்கில் ஊதித்தள்ளக் கூடிய இலக்கை விரட்டத் தொடங்கிய மும்பை அணி, ஆரம்பத்தில் இருந்தே தடுமாறத் தொடங்கியது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சூர்யகுமார் மட்டும் ஒரு முனையில் நிலைத்து நிற்க, மும்பை அணி வீரர்கள் வருவதும் போவதுமாக அணிவகுப்பு நடத்தத் தொடங்கினர். அணித் தலைவர் வில்லியம்சனின் திட்டப்படி, ஹைதராபாத் பந்து வீச்சாளர்கள் அனைவரும் மிகத் துல்லியமாகப் பந்து வீச , மும்பை ஓட்டங்களை எடுக்கத் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்தது. லெவிஸ் 5, இஷான் கிஷான் 0, ரோஹித் சர்மா 2, குர்னல் பாண்டியா 24, பொலார்ட் 9,மக்லீனன் 0, மார்க்கண்டே 1, முஷ்பிகூர் ரஹ்மான் 1 , பும்ரா ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களைப் பெற்றனர். கடைசிக் கட்டத்தில் மும்பை அணியின் நட்சத்திர வீரர் ஹர்திக் பாண்டியா களத்தில் நின்று 19 பந்துகளை வீணடித்து, வெறும் 3 ஓட்டங்களையே பெற்றார். மும்பை அணி 18.5 ஓவர்களில் 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து, இரண்டாவது தடவையாகவும், தன் சொந்த மண்ணில் ஹைதராபாத் அணியிடம் வீழ்ந்தது.

ஹைதராபாத் தரப்பில் சித்தார்த் கவுல் 3, ரஷீட் கான் 2, பசில் தம்பி 2, சந்தீப் சர்மா 1, நபி 1, சகிப் அல் ஹசன் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 4 ஓவர்கள் பந்துவீசி, ஒரு ஓட்டமற்ற ஓவர் உள்ளடங்கலாக 11 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்திய ரஷீட் கன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (அ)

# ஓய்வை அறிவித்தார் யுவராஜ்



மும்பை,ஏப்.25

இங்கிலாந்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பைக்கு பின் ஓய்வு குறித்து அறிவிப்பேன் என்று யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ்சிங் கடந்த ஆண்டு (2017) ஜூன் மாதத்துக்கு பிறகு இந்திய அணியில் இடம் பிடிக்கவில்லை. 36 வயதான யுவராஜ்சிங் தற்போது ஐபிஎல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் யுவராஜ்சிங் அளித்த ஒரு பேட்டியில், '2000-ம் ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நான் விளையாடி வருகிறேன். ஏறக்குறைய 17 முதல் 18 ஆண்டுகளாக விளையாடி உள்ளேன். நிச்சயமாக 2019-ம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு பிறகு ஓய்வு குறித்து முடிவு எடுப்பேன்.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி இந்த முறை துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் வலுவானதாக உள்ளது. எங்கள் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதுடன் கோப்பையையும் வெல்ல முடியும் என்று நம்புகிறேன். 20 ஓவர் போட்டியில் முடிவுகளை கணிக்க முடியாது.

எந்தவொரு அணியும், எந்தவொரு நாளிலும் வெற்றி பெறலாம். சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த கூடியதாகும். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நன்றாக விளையாடி வருகிறது. ஐபிஎல் போட்டியில் இந்த இரு அணிகளும் சிறப்பானவையாகும்" என்று தெரிவித்தார்.

# கோலூன்றிப் பாய்தலில் சாதித்த வடக்கு வீரர்கள்



கொழும்பு, ஏப். 25

இளையோருக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில், 18 வயது ஆண்களுக்கான பிரிவில் வடக்கு மாகாண வீரர்கள் அனைத்துப் பதக்கங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இளையோருக்கான தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில், நேற்று கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த திசாந் (3.90 மீற்றர்), சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த அ.பவிதரன் (3.80 மீற்றர்), சாவகச்சேரி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த நி.பாணுஜன் (3.70 மீற்றர்) ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் என ஒரே பிரிவில் - ஒரே போட்டியில் வழங்கப்பட்ட அனைத்துப் பதக்கங்களையும் தமதாக்கிக் கொண்டனர். (ஐ-13)

## தாயாகவுள்ள சானியா



டெல்லி,ஏப்.25

இந்திய நட்சத்திர டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா விரைவில் தாயாகவுள்ளதாக டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச டென்னிஸ் அரங்கில் இந்தியாவுக்கு பெருமை சேர்ந்த சானியா, கடந்த 2010ல் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயிப் மாலிக்கை திருமணம் செய்து கொண்டார். பாகிஸ்தான் வீரரை திருமணம் செய்து கொண்ட போதிலும், சானியா தொடர்ந்து இந்தியாவுக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில், இவர் விரைவில் தாயாகவுள்ளதாக டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சானியா வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'பேபி மிர்சா-மாலிக்' என குறிப்பிட்டு ஒரு படத்தின் மூலம் தாயாகவுள்ள விஷயத்தை தெரிவித்துள்ளார். இவரது கணவர் மாலிக்கும் இதே படத்தை பகிர்ந்துள்ளார். இந்த தகவலை சானியா மிர்சாவின் தந்தையும் உறுதி செய்துள்ளார்.

# உலக லெவன் அணியில் மேலும் மூவர் இணைவு



லண்டன்,ஏப்.25

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் ரி20 போட்டிக்கான உலக லெவன் அணியில் ரஷித் கான், ஷாகிப் அல் ஹசன், தமிம் இக்பால் இடம்பிடித்துள்ளனர்.

இர்மா, மரியா ஆகிய இரண்டு புயல்கள் கடந்த ஆண்டு மேற்கிந்தியாவில் கடும் சேதத்தை ஏற்படுத்தின. இதில் கிரிக்கெட் மைதானங்களும் அடங்கும். இந்த மைதானங்களை சீரமைக்க நிதி திரட்டும் வகையில் மே 31-ம் திகதி இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் ஒரு ரி 20 போட்டி நடத்த திட்டமிட்டது. இதில் மேற்கிந்திய அணி உலக லெவன் அணியை எதிர்கொண்டு விளையாடுகிறது.

இதற்கான உலக லெவன் அணியில் ஷாகித் அப்ரிடி, சோயிப் மாலிக், திசர பெரேரா ஆகியோர் விளையாட சம்மதம் தெரிவித்தனர். இந்நிலையில் வங்காள தேசத்தின் தமிம் இக்பால், ஷாகிப் அல் ஹசன், ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் ஆகியோரும் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளனர். இதை ஐசிசி உறுதி செய்துள்ளது. உலக லெவன் அணிக்கு மோர்கன் தலைவராக செயல்பட இருக்கிறார்.

# கோலிக்கு சிறந்த பரிசு



மும்பை, ஏப். 25

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தன்னை விட அதிக சதம் அடித்தால் விராட் கோலிக்கு மிகச்சிறந்த பரிசு அளிப்பேன் என கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

மும்பையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட சச்சினிடம், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் உங்கள் சாதனையை விராட் கோலி முறியடித்தால் அவருக்கு 50 வைன் போத்தல்கள் அனுப்புவீர்களா என கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த சச்சின், 'கோலி என்னுடைய சாதனையை முறியடித்து 50 சதம் அடித்தால் அவருக்கு 50 வைன் போத்தல் அனுப்ப மாட்டேன். அதற்குப் பதிலாக அவருடன் அமர்ந்து வைன் சாப்பிடுவேன்' என கூறினார்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.